# மணப்பாறை நகராட்சி

**2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 05-ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.20 மணிக்கு அறிஞர் அண்ணா நகர்மன்ற கூட்ட அரங்கில்**

**நடைபெற்ற சிறப்புக்கூட்டம் நடவடிக்கைகள் விபரம்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 05.06.2026 | **பொருள் – 1**<br>மத்திய அரசின் தூய்மை இந்தியா இயக்கக நேர்முக கடிதம் 02/03/2023 – SBM-IV, நாள்.29.05.2026, மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1060/2025/இ3, நாள்.02.06.2026-ன்படி, உலக சுற்றுச்சூழல் தினம் ஆண்டு தோறும் ஜீன் 05-ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இதனை காலநிலை நடவடிக்கைக்கான உலகளாவிய அழைப்பு என்ற கருப்பொருளில் கொண்டாடப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு 2026 ஜீன் – 05 முதல் 12 தேதி வரை ஒரு வார காலத்திற்குள் பிரத்தியோக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தவும், அதில் 05.06.2026 அன்று அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் கீழ்க்கண்ட பொருள்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு சிறப்பு நகர்மன்ற கூட்டம் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>1. மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த வழிகாட்டு உத்தரவுகளின்படி, திடக்கழிவு மேலாண்மை விதிகளை அமுல்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தலாம்<br>2. குப்பைகளை ஈரக்கழிவு, உலர்கழிவு, சுகாதார கழிவு மற்றும் சிறப்புக்கழிவு என்ற கட்டாயமான நான்கு வகை குப்பைகளாக பிரித்தல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல்<br>3. புதிய திடக்கழிவு மேலாண்மை விதிகள் -2026 மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த வழிகாட்டுதல்களை அமுல்படுத்துவது தொடர்பாக வார்டு அளவிலான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல்.<br>4. SBM 2.0 இயக்கத்தின்படி, தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தூய்மையை பேணிக்காத்தல் தொடர்பான விழிப்புணர்வு , குப்பைகளை பிரித்தல், சேகரித்தல் மற்றும் அப்புறப்படுத்துதல், திட்ட நிலை மற்றும் செயலாக்கம், பழைய கழிவுகளை சீரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல். | **தீர்மான எண்.1075**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட பொருள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி செயல்படுத்திட மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. பதிவு செய்யலாம்<br>2. புதிய திடக்கழிவு மேலாண்மை விதிகள் -2026 மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த வழிகாட்டுதல்களை அமுல்படுத்தலாம்<br>(ந.க.எண்.1309/2026/எச்1) | |

**(ஒம்) கீதா.ஆ.மைக்கேல்ராஜ்**

**நகர்மன்றத் தலைவர்**

**மணப்பாறை நகர்மன்றம்**